**BRAMPTON** Service and Information Update

# கோவிட்-19 தொற்றுப்பரவல் காலத்தில் ப்ராம்ப்ட்டன் நகரில் குடும்ப தினம் (Family Day) 2021

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 10, 2021) – குடும்ப தினம் என்பது நமது சமுதாயத்தில் குடும்பத்தினருக்கான முக்கியத்துவத்தை அங்கீகரிக்கிறது. இந்த ஆண்டின் குடும்ப தினமானது பிப்ரவரி 15, 2021 திங்கட்கிழமையன்று இடம் பெறுகிறது; இதன் காரணமாக நகரின் சேவைகள் பலவும் கிடைக்கப்பெறாது அல்லது குறைக்கப்பட்ட அளவில்தான் இந்த சேவைகள் கிடைக்கும்.

தீயணைப்பு மற்றும் அவசரகாலச் சேவைகள், போக்குவரத்துச் சேவைகள், சட்ட அமலாக்கம், சாலைப்பணிகள், POA நீதிமன்றங்கள் மற்றும் பாதுகாப்பு சேவைகள் ஆகியவை உள்ளிட்ட மிக முக்கியமான சேவைகள், நமது சமூகத்தினருக்கு ஆதரவளிப்பதற்காக, வழக்கம்போல் தொடர்ந்து செயல்படும்.

எந்த ஒரு விசாரிப்புக்கும் குடியிருப்புவாசிகள் 311 ஐ அல்லது 905.874.2000 (ப்ராம்ப்ட்டனுக்கு வெளியிலாக), ஐ அழைக்கலாம், Brampton 311 செயலியை (App Store அல்லது Google Playயில் கிடைக்கிறது) உபயோகிக்கலாம், www.311brampton.ca க்கு வருகை தரலாம் அல்லது 311@brampton.ca க்கு மின்னஞ்சல் செய்யலாம். கோவிட்-19 தொற்றுப்பரவல் விசாரிப்புக்கள் உள்ளிட்ட ப்ராம்ப்ட்டன் நகரம் அல்லது பீல் பிராந்தியம் பற்றிய எந்த விசாரிப்புக்களுக்கும் நாங்கள் 24/7 என்னும் முறையில் கிடைக்கபெறுகிறோம். மேலும் தகவல்களுக்கு வருகை புரியவும்: www.brampton.ca/COVID19 .

### மேயர் அவர்களின் புத்தாண்டு லெவீ (Levee)

பிப்ரவரி 13, சனிக்கிழமை காலை 11 மணிக்கு மேயர் அவர்களின் புத்தாண்டு லெவீ-யில் கலந்துகொள்ள உங்களுக்கு அழைப்பு விடுக்கிறோம். சிட்டி டிவி (CityTV) யின் கிறிஸ்ட்டினா ஹவ்ரன் அவர்களால் நெறிப்படுத்தப்பட்டு, ப்ராம்ப்ட்டன் மேயர் பேட்ரிக் ப்ரவுன் அவர்களும் கவுன்சில் உறுப்பினர்களும் ஆற்றும் உரைகளைக் கேளுங்கள்; ப்ராம்ப்ட்டன் நகரைப் பற்றி நீங்கள் அறிந்திருக்கிறீர்களா என சோதித்துக் கொள்ளுங்கள்; ட்ரிவியா விளையாட்டுக்கள் விளையாடி, டவுண்டவுன் வணிகர்களிடமிருந்து பொருட்கள் வாங்குவதற்கான இ-பரிசு அட்டைகளை வெல்வதற்கான வாய்ப்பினைப் பெறுங்கள், மெய்நிகர் புகைப்படக் காட்சியறையில் வைக்க ஒரு புகைப்படம் எடுக்க மறக்காதீர்கள்! மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/events.

### ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து

குடும்ப தினத்தன்று ப்ராம்ப்ட்டன் போக்குவரத்து பேருந்துகள் ஞாயிறு/ விடுமுறைதின கால அட்டவணைப்படி இயங்கும். பேருந்துகள் இயங்கும் வழித்தடங்கள்:

• 501 ஸூம் க்வீன்

- 502 ஸூம் மெயின்
- 505 ஸூம் பொவையர்ட்
- 511 ஸூம் ஸ்டீலெஸ்
- 1 க்வீன்
- 2 மெயின்
- 3 மெக்லாலின்
- 4 சிங்க்வாகவ்ஸி
- 5 பொவையர்ட்
- 7 கென்னெடி
- 8 சென்ட்டர்
- 11 ஸ்டீலெஸ்
- 14 டோர்ப்ரம்
- 15 ப்ரமீலியா
- 18 டிக்ஸீ
- 23 சாண்டல்வுட்
- 29 வில்லியம்ஸ்
- 30 ஏர்போர்ட் ரோட்.
- 35 க்லார்க்வே
- 50 கோரே ரோட்.
- 52 மெக்மர்ச்சி
- 53 ரே லாஸன்
- 56 கிங் நால்
- 57 சாரோலய்ஸ்
- 115 பியர்ஸன் ஏர்போர்ட் எக்ஸ்பிரஸ்

மேலும் தகவல்களுக்கு, தொடர்புக்கான மையத்தை 905.874.2999 என்ற எண்ணில் அழைக்கவும் அல்லது, visit bramptontransit.com வலைத்தளத்திற்கு வருகை தரவும்.தொடர்புக்கான மையம் பிப்ரவரி 15 ஆம் தேதி காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை திறந்திருக்கும்.

பிப்ரவரி 15 ஆம் தேதி அனைத்து வாடிக்கையாளர் கவுன்ட்டர்களும் மூடப்பட்டிருக்கும். ப்ரமீலியா, ப்ராம்ப்ட்டன் கேட்வே மற்றும் டவுண்டவுன் பேருந்து முனைய கட்டிடங்கள் காலை 6 மணி முதல் மாலை 9 மணி வரை திறந்திருக்கும். டிரினிட்டி பொது முனையம் மூடப்பட்டிருகும்.

மேம்படுத்தப்பட்ட கால அட்டவணைப்படி பேருந்துகளைத் தூய்மைப்படுத்தி அவற்றில் கிருமிநாசினி

தெளிக்கும் வேலை மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு 48 மணிக்கொரு முறை பேருந்துகளின் அனைத்து பரப்புகள், இயக்குபவர் அமருமிடம் மற்றும் அனைத்து இருக்கைகளையும் கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைப்பதே ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையின் இலக்காகும். தற்சமயம் பேருந்துகள் 24 மணிக்கு ஒருமுறை கிருமிநாசினி தெளிக்கப்படுகின்றன. பேருந்து முனையங்கள் மற்றும் நிறுத்தங்களில் உள்ள மேற்பரப்புகளும்கூட தினசரி அடிப்படையில் தூய்மைப்படுத்தி கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைக்கப்படும்

பேருந்து பயணிகள் முகக் கவசம் அணிந்திருக்கும்போதும் கூட, பேருந்து முனையங்கள், மற்றும் பேருந்து நிறுத்தங்களில் கூடிய மட்டில் உடல்ரீதியான இடைவெளி விடுவதைத் தொடர்ந்து பேணி வருமாறு நகர நிர்வாகம் கேட்டுக்கொள்கிறது. பேருந்து பயணியர் தங்கள் கைவசம் தமது உபயோகத்திற்காக தங்கள் சொந்த கிருமி நாசினி, கைகளைக் கழுவும் சுகாதார பொருட்களை வைத்திருந்து தங்கள் கைகளை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்; இருமும்போதும், தும்மும்போதும் தங்கள் முழங்கையில் முகம் புதைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். உங்களுக்கு உடல் நலமில்லாது இருந்தால், பேருந்தில் பயணம் செய்வதைத் தவிர்க்கவும்; அருகாமையில் இருக்கின்ற கோவிட்-19 மதிப்பீட்டு மையத்தில் சோதனை செய்துகொண்டு, பொது சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பின் வழிகாட்டுதலின் பேரில், பேருந்து பயணிகள், பேருந்துகளிலும் மற்றும் பேருந்து முனையங்களிலும் இருக்கும்போது, உங்கள் மூக்கு, வாய் மற்றும் தாடையை மறைத்தபடி, மருத்துவம் அல்லாத முகக் கவசம் அணிய நினைவூட்டப்படுகிறார்கள். ஆபத்துக்களைக் கண்காணிப்பதற்காக, பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பு மற்றும் ப்ராம்ப்ட்டன் நகர அவசரகால மேலாண்மை அலுவலகம் ஆகிய தனது கூட்டு அமைப்புகளுடன் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் நெருங்கி பணியாற்றி வருகிறது.

வழக்கப்படியான புதுத் தகவல்களுக்கு www.brampton.ca/covid19 எனும் வலைத்தளத்திற்கு வருகை புரியவும் மற்றும்சேவைகள் பற்றிய புதிய தகவல்களுக்கு www.bramptontransit.com க்கு வருகை தரவும் அல்லது @bramptontransit ஐ டுவிட்டரில் பின்பற்றவும். கேள்விகள் இருப்பின் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்தின் தொடர்பு மையத்தை 905.874.2999.இல் தொடர்பு கொள்ளவும்.

**ப்ராம்ப்ட்டன் பொழுதுபோக்கு**

<u>குடும்ப தின வேடிக்கை-ஆன்லைனில்</u>

பிப்ரவரி 13 மற்றும் 15 தேதிகளில் ப்ராம்ப்ட்டன் நகர நிகழ்ச்சி நடத்துபவர்களின் மெய்நிகர் விளையாட்டுக்கள் மற்றும் செயல்பாடுகளை மகிழ்ந்து அனுபவியுங்கள்! ஃபேமிலி ஃப்யூட் (Family Feud), ஜேப்பர்டி(Jeopardy), அல்லது ஸ்கெவெஞ்சர் ஹண்ட் (scavenger hunt) ஆகியவற்றை விளையாட முழுக் குடும்பத்தையும் பதிவு செய்துகொள்ளுங்கள். WebEx தளம் மூலம் பல அமர்வுகள் கிடைக்கின்றன. ஆன்லைனில் முழு விபரங்களைக் காண வருகை தரவும்: www.brampton.ca/recreation.

நீங்கள் ஒரு செயல்பாட்டை விரும்பினால், உங்கள் வேகத்துக்கு தக்கபடியே நீங்கள் செய்யலாம்; ஒரு குடும்பப்பட அட்டை அல்லது குட்டி குடும்ப மரம் ஆகியவற்றை, இலவச கைவினை தொகுப்பு மூலம் செய்யலாம். தொடுவது தேவையில்லாமல், ஜன்னலோரமாக எடுத்துக்கொள்ளும் வசதியானது பிப்ரவரி 11 மற்றும் 12 தேதிகளில் சவுத் ஃப்ளெட்ச்சர்ஸ் ஸ்போர்ட்ஸ்ஃப்லெக்ஸ் (South Fletcher's Sportsplex) மற்றும் கிரீன்ப்ரையர் ரிக்ரியேஷன் சென்ட்டர் (Greenbriar Recreation Centre) ஆகிய இடங்களில் மாலை 3:30 முதல் 7:30 வரை கிடைக்கிறது. அந்தந்த இடங்களில் இருக்கும் அறிவிப்பு பலகைகளில் கொடுக்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களை தயவு செய்து பின்பற்றவும். கைவினை செய்வதற்கான பொருள் தொகுப்புக்கள் முதலில் வருபவர்களுக்கு சரக்கு இருக்கும் வரை கிடைக்கும்; ஒரு குடும்பத்திற்கு ஒன்று மட்டுமே. முழு விபரங்களை www.brampton.ca/recreation இல் பார்க்கவும்.

திறந்தவெளி பனிச்சறுக்கு

ப்ராம்ப்ட்டன் நகர பனிச்சறுக்கு வளையங்கள், வானிலை அனுமதிக்கும்பட்சத்தில், குடும்ப தினம் அன்று திறந்திருக்கும். அவற்றின் செயல்பாட்டு நேரங்களைக் காண வேண்டிய வலைப்பக்கம்: www.brampton.ca/outdoorskating.

சமூகத்தின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பது, குறிப்பாக COVID-19 இன் போது, நகரத்தின் முக்கிய முன்னுரிமை கொண்ட விஷயமாகும். பீல் பொது சுகாதார அமைப்பின் பரிந்துரைகளுக்கு இணங்க, பனிச்சறுக்கு வளையங்களுக்கு வருகை தருவதற்கென ஒரு முன்பதிவு செய்துகொள்ளும் முறை உள்ளது. இது தனிநபர்கள் கொள்திறன் தேவைகள் பேணப்படுவதை உறுதி செய்வதோடு, தேவைப்படும்போது தொற்றுக்கான தடமறிதலும் சாத்தியமாகும்.

முன்பதிவு 24 மணி நேரம் முன்னர் வரை கிடைக்கும். குடியிருப்புவாசிகள் தங்கள் இடத்தை கீழ்க்கண்ட வகையில் முன்பதிவு செய்யலாம்:

- cityofbrampton.perfectmind.com இல் ஆன்லைனில் பதிவு செய்தல்
- முன்பதிவுக்கான எண் 905.791.2240 இல் அழைத்தல்
- நகர எல்லைக்குளாக இருந்தால் Service Brampton ஐ 311 இல் அழைத்தல்

அனைத்து முன்பதிவுகளும் ஒரு மணி நேர காலத்திற்கு மட்டுமே. பெற்றோர், பாதுகாவலர்கள் அல்லது ஸ்கேட்டிங் செய்பவர்களுடன் வருகிற, ஆனால் பனிச்சறுக்கு மைதானத்திற்குள் செல்லாத மற்றவர்கள் உட்பட, அனைத்து ரசிகர்களுக்கும் முன்பதிவு செய்வது அவசியமாகும். குடியிருப்புவாசிகள் வந்தவுடன் ஒரு ஆன்சைட் வரவேற்பு கூடாரத்தில் ஊழியர்களிடம் சரிபார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். உங்கள் முன்பதிவை ரத்து செய்ய வேண்டுமானால், 905.791.2240 ஐ அழைக்கவும் அல்லது நீங்கள் பதிவு செய்த நேரத்துக்கு 1 மணி நேரம்

முன்பாக recconnects@brampton.ca எனும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும் .

அனைத்து திறந்தவெளி பனிச்சறுக்கு மைதானங்களிலும் பத்து (10) வயதுக்கு மேற்பட்ட அனைத்து பங்கேற்பாளர்களும் பனிக்கட்டி மைதானத்தில் இருக்கும்போது மருத்துவம் அல்லாத முகக்கவசம் அல்லது முகத்திரை அணிவது கட்டாயமாகும். பனிச்சறுக்கு செய்யும் மைதானத்தைச் சுற்றிலுமாக உள்ளிருக்கும் இடங்கள், கழிப்பறைகள், மேடை ஏறும் இடங்கள் மற்றும் முன்பதிவு செய்த பனிச்சறுக்கில் பங்கேற்க வரிசையில் காத்திருக்கும்போது ஆகிய அனைத்து சமயங்களிலும் அனைத்து பங்கேற்பாளர்களும் முகக்கவசத்தை தொடர்ந்து அணிந்தபடியே இருக்க தேவைப்படுகிறார்கள்.

வீட்டில் இருந்தபடியே பொழுதுபோக்கு

ஆன்லைன் உடற்பயிற்சி மற்றும் கைவினை பயிற்சிகள் மூலம் வீட்டில் சுறுசுறுப்பாக இருங்கள்! முழு உடல் பயிற்சிக்கு முயற்சிக்கவும், அட்டையில் செய்யப்படும் இதயம் போன்ற வடிவங்களை உருவாக்குவது, உங்கள் கையெழுத்து திறன்களை மேன்மைப்படுத்த பயிற்சி செய்வது மற்றும் பலவற்றைக் கற்றுக் கொள்ளுங்கள். www.brampton.ca/recathome இல் பல்வேறு வகையான ரெக் அட் ஹோம் (Rec At Home )செயல்பாடுகளை அணுகவும்.

பொழுதுபோக்கு மையங்கள் கோவிட்-19 காரணமாக மூடப்பட்டே இருக்கும். எங்களது பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மற்றும் சேவைகள் பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/recreation.

**ப்ராம்ப்ட்டன் நூலகம்**

குடும்ப தினம் அன்று ஜன்னலோரமாக புத்தகம் எடுத்துச்செல்லும் வசதி கிடைக்காது. எங்கள் டிஜிட்டல் நூலகத்திற்கு எந்த நேரத்திலும் வருகைதர வேண்டிய வலைத்தளம்: www.bramptonlibrary.ca .

எங்களது வலைத்தளமானது டிஜிட்டல் இ-புத்தகங்கள், இ-ஆடியோபுத்தகங்கள், டிவி மற்றும் திரைப்பட ஒளிபரப்பு, ஆன்லைன் கற்றல், கலை மற்றும் கைவினை இவை அனைத்துக்கும் இலவசமாக உங்கள் நூலக அட்டை மூலமாக இடைவிடாத அணுகல் தருகிறது. அனைத்து வயதினர் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ற நிகழ்ச்சிகளைத் தேட வருகை தரவும்: நிகழ்ச்சிகளுக்கான நாட்காட்டி (Calendar of Events).

அவரவர் விருப்பப்படி புத்தகங்களைத் திருப்பித் தருவதற்காக அனைத்து கிளை நூலகங்களிலும் புத்தகங்களை விட்டுச்செல்வதற்கான பெட்டி வைக்கப்பட்டுள்ளது. எங்கள் மின்னஞ்சல் புதுப்பிப்புக்களைப் பெற சந்தாதாரர் ஆகுங்கள் மற்றும் Facebook, Twitter, மற்றும் Instagram -இல் பின் தொடருங்கள்.

**ப்ராம்ப்ட்டன் விலங்குகள் சேவைகள்**

ப்ராம்ப்ட்டன் விலங்குகளுக்கான காப்பகம் குடும்ப தினம் அன்று மூடப்படும்.

விலங்குகள் கட்டுப்பாட்டு அமைப்பு  திங்கள் முதல் வெள்ளிவரை காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரையும், சனி, ஞாயிற்றுக்கிழமை மற்றும் விடுமுறை நாட்களில் காலை 8 மணி முதல் மாலை 6:30 மணி வரையிலும் சாலைகளில் செயல்படுவார்கள், மற்றும் பின்வரும் அழைப்புக்களுக்கு மட்டுமே செவிசாய்ப்பார்கள்:

- நோயுற்ற/காயப்பட்ட/ஆக்ரோஷமான வீட்டு மற்றும் காட்டு விலங்குகளை பிடித்து செல்லுதல்
- ஆக்ரோஷமான விலங்கு
- சுற்றித்திரியும் நாய்
- நாய்க்கடி விசாரணை
- அடைபட்ட தெருநாயைப் பிடித்து செல்லுதல்
- இறந்து கிடக்கும் விலங்கினை அகற்றுதல்

**குடும்ப தினத்திற்காக பீல் பிராந்திய பொது சுகாதார அமைப்பின் நினைவூட்டல்கள்**

கோவிட்-19 தொற்று பரவலைத் தடுப்பதற்கான முயற்சிகளை பீல் பிராந்திய அமைப்பு எடுத்துவரும்போதே, அடுத்த அறிவிப்பு வரும் வரை சிலவகை பிராந்திய வசதியமைப்புக்கள் மற்றும் சேவைகள் (regional facilities and services) பாதிக்கப்பட்டபடியே இருக்கும். கூடிய மட்டில் வீட்டிலேயே தங்கி இருந்தபடி, இந்த நோய்க்கிருமி பரவலைத் தடுப்பதற்கான உங்கள் தரப்பு செயலை தயவு செய்து தொடரவும்.  குடும்ப தினம் என்பது நமது அன்பிற்கினியவர்களுடன் ஒன்றுக்கூடி மகிழ்வதற்கான தினமாகும், ஆனாலும் இந்த ஆண்டு கொண்டாட்டத்தின்போது இவற்றை நினைவில் கொள்ளவும்:

• உங்கள் குடும்பத்துடன் நெருக்கமாக இருப்பவர்கள் மற்றும் அத்தியாவசியமான ஆதரவு அளிப்பவர்களுடன் மட்டுமே  கூடியிருங்கள்.

• உங்கள் வீட்டிற்கு வெளியிலாக இருக்கும் குடும்ப உறுப்பினர்கள் நண்பர்கள் பொருத்தவரை, அவர்களுடன் இணைப்பில் இருக்க ஏராளமான புகைப்படங்கள் எடுங்கள் மற்றும் சமூக விலகலைக் கடைப்பிடியுங்கள்.

• மிக முக்கியமான நான்கு பழக்கங்களைக் தொடர்ந்து கடைப்பிடியுங்கள்:

o உடல்ரீதியாக 2 மீட்டர் தூரம் விலகியே இருங்கள்

o முகக் கவசம் அணியுங்கள்

o உங்கள் கைகளை அடிக்கடி கழுவுங்கள்

o நோயுற்றால் வீட்டிலேயே இருந்து விடுங்கள்

BRAMPTON **Service and Information Update**


**ப்ராம்ப்ட்டன் நகர ஊடகத் தொடர்பு**
குர்வீந்தர் சிங்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-2028 | Gurvinder.A.Singh@brampton.ca

**பீல் பிராந்திய ஊடகத் தொடர்பு**
ஆஸ்லீ ஹாக்கின்ஸ்
தகவல் பரிமாற்ற சிறப்பியலாளர் – பொது சுகாதாரம்
பீல் பிராந்தியம்
416.818.4421 | ashleigh.hawkins@peelregion.ca